## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

## அ.வ.எண்.201/2011

02.03.2018

பிரதிவாதி தரப்பு சாட்சி 1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டார்.

**பிரதிவாதிகள் 9 மற்றும் 33 தரப்பு குறுக்கு விசாரணை :-**

வழக்குரை சொத்து விபரத்தில் மொத்தம் 93.27 ஏக்கர் விஸ்தீரணம் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது ஒன்பது காலை எண்களுக்கு கட்டுப்பட்டது என்றால் சரிதான். வழக்குரையில் ரீ.சர்வே எண்கள் 91 முதல் 95 ல் அடங்கும் என குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரிதான். வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்து தனித்தனியாக அனுபவித்து வந்ததால் தான் ரீ.ச.எண்.91,92,93 ,94,95 என பிரிவுகள் பிரிக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ரீ.சர்வே எண்களில் யார் யார் அனுபவத்தில் உள்ளார்களோ அவர்களுக்கு தனித்தனி பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். எனக்கு ரீ.ச.எண்.94/1 ஏ மற்றும் 94/2 ஏ -ல் தனிப்பட்டா வழங்கப்பட்டது . மேற்படி தனிப்பட்டா எனது தனி அனுபவத்தை காட்டுகின்றது. ரீ.ச.எண்.93/3 ,93/4 பூமிகள் 26 ம் பிரதிவாதி பொன்னுச்சாமி தனி அனுபவத்தில் இருந்தது. லோகநாதன் யார் என்று எனக்குத் தெரியாது. மேற்படி ரீ.ச.எண்கள்.93/3, 93/4 ஆகியன வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டு பல நபர்களுக்கு வீட்டு மனையாக விற்பனை செய்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி பூமியை நிரவி , பண்படுத்தி , அளவிட்டு வீட்டு மனைகளாக பிரித்தார்கள் என்றால் சரிதான். லட்சுமி நகர், சரஸ்வதி நகர் என்று பிரித்தார்கள் எத்தனை சைட்டுகள் என்று எனக்குத் தெரியாது. 31 ம் பிரதிவாதி சதீஸ்குமார்

பிளாட் நெ.62 முதல் 70 வரையிலான பிளாட்டுகளை கிரையம் பெற்றுள்ளார் என்றால் அதைப்பற்றி எனக்குத் தெரியாது. 32 ம் பிரதிவாதி அசோக்குமார் 05.07.2000 ல் கிரையம் பெற்றுள்ளாரா என்றால் அதைப்பற்றி எனக்குத் தெரியாது. பிளாட் நெ.2 ல் மேல்புறம் பகுதியை ஏ.சண்முகசுந்தரம் என்பவர் கிரையம் பெற்றுள்ளரா என்றால் அதைப் பற்றி எனக்குத் தெரியாது. 28 ம் பிரதிவாதி ஏ.செந்தில்குமார் சைட் நெ.1 ஐ கிரையம் பெற்றுள்ளார் என்றால் அதைப் பற்றி எனக்குத் தெரியாது. பிளாட் நெ.16 மற்றும் 17 ஐ 30 ம் பிரதிவாதி கே.சாந்தி என்பவர் கிரையம் பெற்றுள்ளார் என்றால் அதைப்பற்றி எனக்குத் தெரியாது. 9 ம் பிரதிவாதி சந்திரசேகரும், 33 ம் பிரதிவாதி செந்தில்குமாரும் மேற்படி பிளாட்டுகளை கிரையம் பெற்றுள்ளார்களா என்றால் அதைப்பற்றி எனக்குத் தெரியாது. வீட்டு மனையாக பிரிக்கப்பட்டுள்ள பகுதிக்கு கிழபுறமாக ஒரு சாமியப்பகவுண்டருக்கு பாத்தியப்பட்ட பூமி உள்ளது . அதற்கு கிழபுறம் எனக்கு பாத்தியப்பட்ட 4.80 ஏக்கர் பூமி உள்ளது. எனக்கு பாத்தியப்பட்ட பூமிக்கு பட்டா எண்.610 ஆகும். வீட்டு மனையாக வாங்கியவர்கள் ஏதாவது வீடு கட்டியுள்ளார்களா என்றால் இல்லை. மேற்படி பிளாட்டுகளாக பிரிக்கப்பட்டுள்ள பூமியில் கிழமேலாகவும் தென்வடலாகவும் தடம் உண்டு . வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்ட இடங்களுக்கு கிழபுறமாக 26 ம் பிரதிவாதி பொன்னுச்சாமிகவுண்டருக்கு பூமி உள்ளது என்றால் சரியல்ல. வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்ட இடங்களுக்கு கிழபுறமாக 1 முதல் 3 பிரதிவாதிகள் பூமி உள்ளது. பூமியை நிரவி பிளாட் போட்டு விற்பனை செய்து சுமார் 15 ஆண்டுகளுக்கும் மேல் இருக்கும் . மேற்படி சங்கதிகள் யாவும் வாதிகளுக்கும் தெரியும். வாதிகள் யாரும் வீட்டு மனைகளாக பிரிக்கக்கூடாது என்றோ, விற்பனை செய்யக்கூடாது என்றோ ஆட்சேபனை எதுவும் செய்யவில்லை. என்னுடைய

பாகத்திற்கு கிழபுறம் 6,7 பிரதிவாதிகள் பூமியும் அதற்கு கிழபுறம் வாதிகள் பூமியும் உள்ளது. வாதிகள் பூமிக்கு தனியாக புல எண்கள் உண்டு. அதற்கு தனிப் பட்டா, சிட்டா உண்டு. அவர்கள் தனியாக அனுபவித்து வந்து அதற்கு கந்தாயம் செலுத்தி வருகிறார்கள். மேற்படி விபரங்கள் வழக்குரையில் மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஏற்கனவே பாகமாகி விட்டபடியால் இனி பாகம் பிரிக்க வேண்டிய அவசியம் இல்லை ,இந்த வழக்கும் தேவையில்லை.

**26 ம் பிரதிவாதி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.**

வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.